பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 01 திங்கட்கிழமை 17.07.2023 கதிர் 248

# தமிழர்களுக்கான தீர்வு குறித்த இந்திய மனநிலை மாறவேண்டும்

## தமிழ்த் தேசிய முன்னணி வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியா தனது மனநிலையைமாற்றிக்கொள்ளவேண்டுமென வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்களில் ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் ஒற்றையாட்சியை நீக்கி சமஷ்டி அடிப்படையிலான தீர்விற்கு இந்தியா முன்வர வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடாத்திய ஊடக சந்திப்பின் போதே கஜேந்திரன் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:.

இலங்கை ஜனாதிபதி இந்த மாத இறுதியில் இந்தியப் பிரதமரை சந்திக்கவுள்ளார். இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் எங்களது நிலைப்பாட்டை சுட்டிக்காட்டி இந்திப் பிரதமருக்கு கடிதமொன்றை யும் அனுப்பி வைத்துள்ளோம்.

ஒற்றையாட்சி மை நீக்கி சமஷ்டி அடிப்படையிலான தீர்வை நாங்கள் வலியுறுத்தியுள்ள நிலையில் வேறு சிலர் ஒற்றையாட்சியை ☞2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப்பயணத்தையொட்டி இலங்கையில் இருந்து இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதங்கள் பறந்து வருகின்றன. பன்னாட்டுச் சமூகத்திற்கான கோரிக்கை, ஐ.நாவுக்கான கோரிக்கை என்று பரந்து விரிந்திருந்த தமிழ் அரசியல்வாதிகளின் கோரிக்கைகள் இப்போது மோடிக்கான கடிதங்களாகச் சுருங்கியிருக்கின்றன. இதுவரை மோடிக்கு அனுப்பப்பட்ட இரு கடிதங்களில் ஒன்றில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுங்கள் என்று ஜனநாயகக் கூட்டணி தெரிவித்துள்ளது. ஒற்றையாட்சியின் கீழான 13ஐ விட்டுவிட்டு சமஷ்டியை ஆதரியுங்கள் என்று மக்கள் முன்னணி கேட்டுள்ளது.

இப்படி ஒன்றுக்கொன்று முரணான கடிதங்களை ஒருவேளை மோடி பார்த்தாலும் ஏதாவது நடக்குமா என்று கேட்டால், இல்லை என்பதே பதில். கடந்த 35 ஆண்டுகளில் இந்தத் தமிழ்க் கட்சிகள் கேட்டு எதனையும் செய்யாத இந்தியா இப்போது மட்டும் எதையாவது இவர்கள் கேட்டுச் செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது. அது தன் ☞2

# இலங்கை சுகாதாரத்துறை மாபியாக் களமாகிவிட்டது

## தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

ஆசியாவின் சிறந்த சுகாதார வசதிகள் கொண்ட நாடாக இலங்கை காணப்பட்டது. ஆனால் இன்று வைத்தியசாலைகளுக்குச் செல்வதற்குப் பயமாகவுள்ளது. சுகாதாரத்துறை என்பது கொள்ளை மற்றும் ஊழலில் ஈடுபடும் மாபியாக்களின் இடமாக மாறியுள்ளது. இந்த மாபியாக்கள் மில்லியன் பில்லியன் கணக்கில் சம்பாதிக்கின்றன.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் பரப்புரைச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

திவுலப்பிட்டிய பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு ☞2

### வரலாற்று அடையாளங்களில் ஒன்றான

# சங்கிலியன் தோரண வாயில் சீரமைப்பு முடித்துத் திறப்பு



நல்லூர் இராசதானியின் அடையாளங்களில் ஒன்றான சங்கிலியன் தோரண வாசல் சீரமைக்கப்பட்டு நேற்று மாலை திறந்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப்பல்கலைக் கழக முன்னாள் மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் சுப்ரமணியம் ரவிராஜ் இந்தச் சீரமைப்புக்கான நிதி அனுசரணையை வழங்கியிருந்தார்.

யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், ஜெயபாஸ்கரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், சிவபூமி அறக்கட்டளை ☞2

# வரலாற்றுச் சின்னங்களை பாதுகாப்பது மிகஅவசியம்

## ஆறு. திருமுருகன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழர்களின் வரலாற்று அடையாளச் சின்னங்கள் பறிபோய்க்கொண்டிருக்கின்ற சூழலில் அதனைப் பாதுகாக்க வேண்டியது அவசியமென வலியுறுத்தியுள்ள சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி சொஞ்செற்செல்வன் தவறினால் வரலாறுகள் புனையப்பட்டு அழிக்கப்படும் நிலைமை ஏற்படுமெனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாசல் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது..

நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாசல் புனரமைக்கப்பட்டதுபோன்று ஏனைய வரலாற்று மரபுரிமைச் சின்னங்களும் புனரமைக்கப்பட்டு அவை அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும்.

குறிப்பாக இங்குள்ள மந்திரி மனையை அடையாளப்படுத்தி காப்பாற்றுவது போன்று ஏனைய வரலாற்று அடையாளச் சின்னங்களையும் அடையாளப்படுத்த வேண்டும்.

இன்றைக்கு தமிழர்களின் அடையாளச்சின்னங்கள் எல்லாம் பறிபோகிறது. வரலாற்று அடையாளங்களை நாங்கள் சரியாகப் போணா விட்டால் அதை புனைந்து அழிக்கநொருக்கிவிடுவார்கள்.

எமது பாரம்பரிய வரலாற்று அடையாள ☞2

# படுகேவல அரசியல் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் தமிழர்கள்

## முன்னாள் தமிழ் எம்.பி. ஆவேசம்



(அகீல்)

"விடுதலைப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான உயிர்களைப் பறிகொடுத்து எத்தனையோ இழப்புகளை சந்தித்த நாம், 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்தியப் பிரதமரைக் கடிதம் மூலம் கோரும் படுகேவலமான அரசியல்நிலமைக்குத்தள்ளப்பட்டுள்ளோம். இதற்காகவா நாம் போராடினோம்?"

இவ்வாறு, தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள்நாடாமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் ஆக்ரோஷத்துடன் கேள்வி எழுப்பினார்.

மட்டக்களப்பில் சனிக்கிழமை மாலை நடைபெற்ற "தராக்கி ஈழத் தமிழ் முன்னோடி" நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியமும், சுவிஸ்-இலங்கைசிவராம்ஞாபகர்த்த மன்றமும் இணைந்து தொகுத்துள்ள படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் தராக்கி டி.சிவராம் தொடர்பான கட்டுரைகள் அடங்கியதாக இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் எல். தேவஅதிரன் தலைமையில், மட்டக்களப்பு ☞2

# வவுனியாவில் 2 குழுக்கள் மோதல்; ஒருவர் படுகாயம்: 4 பேர் காயம்



வவுனியாவில்இருஇளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் காரணமாக ஒருவர் படுகாயமடைந்து ஆபத்தானநிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும் 4 பேர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் உள்ள மோட்டர் சைக்கிள் விற்பனை நிலையம் ஒன்றின் முன்பாக சனிக்கிழமை இரவு இறத இரு இளைஞர்குழுக்களும் ☞2

# ரணிலின் அழைப்பினை நிராகரித்தது முன்னணி

(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள பேச்சிற்கான அழைப்பை நிராகரிப்பதாகத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இதுவொரு கண்துடைப்புநாடகமென்றும் குற்றஞ்சாட்டியுள்ளது.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது...

இலங்கையின்ஜனாதிபதி இந்தியப் பிரதமரை சந்திக்க உள்ள நிலையில் தமிழர் தரப்புடன் தொடர்ந்துதான் பேசுகிறார் என்க் காட்டிக் கொள்கின்ற ஏமாற்று அரசியலுக்காகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கண்துடைப்பு நடவடிக்கைகளுக்கு ☞2

### இந்தியா செல்வதற்கு முன்

# தமிழ்க் கட்சிகளை மீண்டும் பேச அழைக்கிறார் ரணில்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்க் கட்சிகளை மீண்டுமொரு தடவை பேச்சிற்கு வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார் என்று தெரிய வருகின்றது.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க இந்த மாத இறுதியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச்சந்திக்க உள்ளார்.

இந்த நிலையில் தமிழர் தரப்பிலுள்ள கட்சிகள் பலவும் கூட்டாகவும் அதேநேரம் தனித்தனியாகவும் இந்தியப் பிரதமருக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளன.

ஜனநாயகக் கூட்டணி மற்றும்தமிழ்மக்கள்கூட்டணி ஒரு தரப்பாகவும் முன்னணி ஒருதரப்பாகவும்கடிதங்களை அனுப்பிவைத்துள்ளன. தமிழ் அரசுக் கட்சியும் தனியாக ஒரு கடிதம் அனுப்பும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர் இனப் பிரச்சனைக்கான தீர்வு குறித்து தாம் கோருவதைச் சுட்டிக் காட்டி அதனை இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்தி அழுத்தங்களை பிரயோகிக்குமாறு கோரிக்கைகளை முன்வைத்து இருக்கின்றன.

இந்த நிலையில், ஜூலை 20 இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணில், மறுநாள் இந்தியப்பிரதமரைச்சந்தித்துப் பேசவுள்ளார். இந்த இந்தியப் பயணத்திற்கு முன்னதாக தமிழ்க் கட்சிகளை ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நலன்சார்ந்த முடிவுகளை மட்டுமேஎடுப்பதில்கவனமாக இருக்கும்.

பொருளாதார நெருக்கடிக்குள்சிக்கிக்கொண்டுள்ள இலங்கையிடம் இருந்து இப்போதைக்குப்பெறுவதற்கு ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்விலும் பார்க்க இலாபகரமான பல விடயங்கள் இந்தியாவிற்கு உண்டு. ஜனாதிபதியின் இந்தியப்பயணத்தின்போது பலஉடன்வடிக்கைகள்கைச் சாத்திடப்படவுள்ளன. அவற்றில்லிட்ரோகாஸ்நிறுவனம் உட்பட, ஆட்சியாளர்கள் தனியாருக்கு விற்கவுள்ள 7 அரச நிறுவனங்களில் இரண்டை இந்தியத நிறுவனங்களுக்கு விற்பனை செய்வது தொடர்பான ஒப்பந்தங்களும்அடங்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்கு வருவதற்கு முன்பாக அவர் நிறைவேற்ற வேண்டிய பல விடயங்கள் உள்ளதாகஅவருக்குஇந்தியா நிபந்தனை விதித்திருந்தது. ஏற்கனவே இடைநடுவில் நின்றஇந்தியத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான அனுமதிகளும் அதில் அடக்கம். இவைகுறித்துபேசி ஒரு முடிவு எடுப்பதற்காகவே இந்தயி அயலுறவுச்செயலர் மொகான்விக்கிரம்கொழும்பு வந்து திரும்பியிருந்தார்.

அவரது பயணத்தின் போது அவர் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் எவரையும் சந்திக்கவில்லை. ரணிலின் பயணத்தில் ஈழத்தமிழர்கள் விடயம் எந்தளவிற்கு முக்கியத்துவம் பெறும் என்பதற்கான தெளிவான சமிக்ஞை அது. பின்னர் ஒரு சமாளிப்பிற்காக இந்தியத் தூதுவர் பாக்லே தமிழ் அரசுக் கட்சிப் பெருந்தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்துப் பேசினார்.

இந்தப் பின்னணியில் ரணிலின் இந்தியப் பயணத்தின்போது ஈழத் தமிழர் அரசியல் பிரச்சினைக்கு இந்தியா எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கும் என்று கணிப்பது சிரமமல்ல. அரசியல்தீர்வுதொடர்பாகநிச்சயம் இந்தியா சில வரிகள் பேசும் என்று எதிர்பார்க்கலாம். அந்தச் சில வரிகளும் வழக்கமான வரிகளாக மட்டும் இருப்பதற்கான சாத்தியங்களே அதிகம். அது தெரிந்தும் தமிழ்கள் கட்சிகள் ஏன் இப்போது மோடிக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கின்றன? களத்தில் அவர்களால் முன்னெடுக்கக்கூடிய அரசியல் வேறு எதுவுமில்லை என்பதுதான் அதற்குக் காரணம்.

இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு ரணில் அமெரிக்கா செல்கிறார். அங்கு ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற் கிறார். பல நாடுகளின் தலைவர்களுடனும்அப்போதுபக்கப் பேச்சுக்களை நடத்துவார். அப்படி அவர் சந்திக்கக்கூடிய மேற்கு நாடுகளின் தலைவர்களுக்கும் தமிழ்க் கட்சிகள் இப்படிக் கடிதம் எழுதினாலும் ஆச்சரியப்படுவதற்குஇல்லை. அமெரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டுஒக்டோபர் மாதம் ரணில் சீனாவுக்கும் செல்லவுள்ளார். சீனாவுக்கும் யாராவது கடிதம் எழுத இருக்கிறார்களோ தெரியாது!

**இடிமின்னல்**

(idiminnal23!@gmail.com)

## தமிழர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் தமிழ் மக்கள் நீண்ட காலமாக நிராகரித்து வந்த 13 ஆவது திருத்தத்தை கோரி இருக்கின்றனர்.

எமது மக்கள் நிராகரித்து வந்த ஒற்றையாட்சி அடிப்படையிலான 13ஆவது திருத்தத்தை நீக்கி தமிழர் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சஷ்டியைக் கொண்டுவர வேண்டும் என நாங்கள் கோருகிறோம்.

அதைவிடுத்துஇங்குள்ள சில தரப்புகளுக்குச் சலுகைகளைக் கொடுத்து 13 வேண்டுமென்ற கோரிக்கையைவலியுறுத்துவதுஈழத் தமிழர் தீர்விற்கு சாவுமணி அடிக்கும் செயற்பாடாகவே அமையும்.

இனப்பிரச்சனையை நிரந்தரமாகத்தீர்ப்போம்என்று இன்றைய ஆட்சியாளர்கள் கூறுகிற நிலையில் நாங்கள் எங்களுக்குத் தேவையான சமஷ்டியைகு; கோர வேண்டிய நேரத்தில் யாருக்காகவோ 13ஐக் கோருவது மிகவும் ஆபத்தானது.

ஒற்றையாட்சி அடிப்படையிலான இந்த 13 ஆவது திருத்தத்தை நாங்கள் நிராகரிக்கிறோம். ஒற்றையாட்சி அடிப்படையிலான தீர்வு என்பது மிகவும் ஆபத்தானது. ஆகையினால் இதனை யார் யாருக்காக ஏன் கோருகின்றார்கள் என்பதை எமது மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஒற்றையாட்சிக் கட்டமைப்பில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டுவரப்பட்ட 13 ஆவதை நீக்கி சமஷ்டியை கொண்டு வர வேண்டுமென நாம் கோருகிறோம்.

ஈழத்தமிழர் தீர்வு விடயத்தில் ஒற்றையாட்சிக்குள் இருக்கின்ற 13 ஆவது திருத்தத்தை நீக்கி சமஷ்டி அடிப்படையிலான தீர்வைக் கொண்டு வருவதற்கு ஏற்றவாறாக இந்தியா தனது மனநிலையை மாற்றிக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

## படுகேவல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. விழாவில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜாகஜேந்திரன் உட்படப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

ஊடகவியலாளர் சபீனா சோம சுந்திரத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமான விழாவில் நூல்



அறிமுகத்தினை மகுடம் ஆசிரியர் மைக்கல் கொலின் நிகழ்த்தினார். நூல் வெளியீட்டின் போது மட்டக்களப்பு மாவட்ட மூத்த பத்திரிகையாளர் இ.பாக்கியராசா, அமரர் சிவராமின் பாரியார் பவானி சிவராமுக்கு முதல் சிறப்புப் பிரதியை வழங்கினார்.



விழாவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரிய நேத்திரன் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

எமது விடுதலைப் போராட்டத்தின் முக்கிய இலக்கையும், நோக்கத்தையும் மழுங்கடிப்பதற்கும், திசைதிருப்புவதற்கும்நம்மில் சிலர் முனைப்பு காட்டி வருகின்றனர்.



நாம் கோரி நிற்கும் வடக்கு - கிழக்கு இணைந்த அரசியல் தீர்வைப் புறந்தள்ளியும், நம் உரிமை அரசியலைவிட்டு விலகியும் செயற்பட இத்தகையவர்கள் முனைந்துள்ளமை விசனிக்கத்தக்கதாகும்.

1987 ஜுலையில் செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரமான 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்ப்படுத்துமாறு ஜனாதிபதி ரணிலுக்கு அழுத்தம் கொடுக்குமாறு இன்று நம்மவர் சிலர் இந்தியப் பிரதமர் மோடியைக் கோரி கடிதம் அனுப்பியுள்ளனர்.

படுகேவலமான இந்த அரசியல் நிலைப்பாட்டுக்காகவா இத்தனை இழப்புக்களையும் சந்தித்து நாம் போராடி வந்தோம்?

தமிழ் மக்கள் சமஷ்டியைக் கைவிட்டு விட்டார்களா? எனும் கேள்வி எழும் அளவுக்கு, புரியாணி கேட்டுப்போராடிய நம்மை, பிஸ்கட்டே போதும் என்ற நிலைக்கு இவர்கள் தள்ளியுள்ளனர், மட்டுமல்ல எழுத்திலும் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.

அமரர் சிவராம் இன்றிருந்தால் இதற்குத் தக்க பாடம் கற்பித்திருப்பார் - என்றார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமானசெல்வராசா கஜேந்திரன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியப் பணி களை ஊடகத்துறை மூலம் முன்னெடுத்து வந்த அமரர் தராக்கி சிவராம், கள நிலமைகளைக் கணிப்பிட்டு தமது எழுத்துக்கள் மூலம் மக்களுக்குத் தெளிவூட்டினார்.

மக்கள்சிந்திக்காதுமந்தைகளாகஇருக்கவேண்டுமென நினைத்தவர்களே இத்தகையவர்கள்அழிக்கப்பட்டதற்குக் காரணமானவர்களாவர்.

தேச விடுதலைக்காக உழைத்த அமரர் சிவராம் பூகோள ஆதிக்கப்போட்டியை நன்கு புரிந்து அத்தகைய நிகழ்ச்சி நிரல்களுக்கு இடமளிக்காதவாறு, பூகோள ஆதிக்க சக்திகளுக்கு சிம்ம சொப்பனமாகவும் திகழ்ந்தார். எனவே அவரது இலட்சியத்தை நாம் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். மக்கள் உணர்வுகளைத் தட்டியெழுப்ப வேண்டும்- எனக் கூறினார்.

## இலங்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மருந்துவில்லைகளைப் பாவிப்பதற்கு கெனூலா ஏற்றிக்கொள்வதற்கு பயமாகவுள்ளது. ஏன் ஏன்றால் மருந்துகளின் தரம் அப்படியிருக்கின்றது. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில்பணிபுரிந்த ஊழியர் ஒருவரே இப்படித் தரமற்ற மருந்தால் உயிரிழந்துள்ளார். இது தான் இன்றைய நாட்டின் நிலைமையாகும். சுகாதாரஅமைச்சு என்பது கொள்ளை மற்றும் ஊழலில் ஈடுபடும் மாபியா என்பது அறிந்த ஒன்றாகும்.

வெளிநாடுகளில்இருந்து கொண்டுவரப்படும்மருந்துகளின் பின்னணியில் மாபியா கும்பல்உள்ளது. இலங்கைக்கு மருந்துகளை கொண்டு வரும் மாபியாக்கள் மில்லியன் பில்லியன் கணக்கில் சம்பாதிக்கின்றன. அதற்காகவே இன்று இவ்வளவு சண்டை போடுகிறார்கள் - என்றார்.

## வரலாற்றுச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின்னங்களை பாதுகாக்க யாழ் பல்கலைக்கழக சமூகம் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

எங்கள் அடையாளச் சின்னங்கள் எங்கிருந்தாலும், கேணி, குளம் என்று எதுவாக இருந்தாலும் அந்த இடத்திலே அதன் வரலாற்று முக்கியத்துவம் குறித்துக் கல்வெட்டுக்கள் போடுங்கள்

எங்கள்பாரம்பரியஅடையாளங்களை சொல்வதற்கு எம்மவர்களிடத்தேபொறுமை இல்லை. அந்தபொறுமையை அனைவரும் வளர்த்துக் கொள்ளவேண்டும்-என்றார்.

## சங்கிலியன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவுனர் ஆறுதிருமுருகன், தொல்பொருள் திணைக்கள யாழ்ப்பாண உதவி பணிப்பாளர் யு.ஏ.பந்துலஜீவ ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ் மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலனும் கலந்து கொண்டுதோரணவாயிலைத் திறந்து வைத்தனர்.

தமிழர்களின்வரலாற்றுத் தொன்மையை எடுத்தியம்பும் வகையில் நல்லூரில் காணப்படும் சங்கிலியன் தோரணவாசல்யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தினால் சீரமைக்கப்பட்டது.

மரபுரிமைச்சின்னங்கள் அழிந்து போகாமல் அவற்றைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்கு அந்த மரபுரிமைச் சின்னங்களை ஒப்படைக்க வேண்டிய தார்மீகக் கடமையுடன்உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தினால் முன்னெடுக்கப்பட்ட முதலாவது செயற்றிட்டம் இதுவாகும்.

நல்லூர்இராசதானியின் சங்கிலியன்தோரணவாயில் திறப்பு விழாவை தொடர்ந்து மந்திரி மனை அரங்கில் நிகழ்வுகள் நடைபெற்றன.

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதிக்கொண்டன. இரு குழுக்களுமே வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவை என்று பொலிஸார் தெரிவித்தனர். .

இந்த மோதலில் கார் ஒன்றுவழிமறிக்கப்பட்டுதாக்கி சேதப்படுத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் வவுனியா, யாழ் ஐஸ்கிறீம் வீதியில் வசிக்கும் டிலான் (வயது 25) என்ற இளைஞர் படுகாயமடைந்துவவுனியாவைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில்சேர்க்கப்பட்டார், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்குஅனுப்பி வைக்கப்பட்டுள்ளார். காயமடைந்த மேலும் 4 பேர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலில் படுகாயமடைந்தவரின் சகோதர் மீதும் எதிர்க் குழு வவுனியா வைத்தியசாலையில்வைத்து தாக்குதல் மேற்கொண்டுள்ளது. இதனையடுத்து வைத்தியசாலையில் பதற்ற நிலை ஏற்பட்டதுடன், வைத்தியசாலை முன்பாகவும் இரு குழுக்களுக்கு இடையிலும் மோதல் ஏற்பட்டது. அதிலும் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, குறித்த சம்பவம் இடம்பெற்ற பட்டா ணிச்சூர் பகுதிக்கு செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களுக்கும் அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழு அச்சுறுத்தல் விடுத்ததையடுத்து அவர்கள் அங்கிருந்து வேறு இளைஞர்களால் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டார்கள். .

(100)

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் ஒரு தடவை பேச்சுக்கு வருமாறு அவர் அழைத்துள்ளார். இது தொடர்பான அழைப்பு அவரது வடக்குக்கான இணைப்புச் செயலாளர் ஊடாக கட்சிகளின் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதற்காக வடக்கு கிழக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் சமகால நிலைமைகள் தொடர்பில் பேசு நடத்த வருமாறு இந்த அழைப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கு முன்னர் ஜனாதிபதி விடுத்த பேச்சுக்கான அழைப்பை ஜனநாயகக் கூட்டணி நிராகரித்திருந்தது. தமிழ் அரசுக் கட்சி மட்டுமே பங்கேற்றிருந்தது. அதேநேரம் பிரச்சினைக்குத் தீர்வைக் காணாமல்மீண்டும்தம்மைப் பேச்சுக்கு அழைக்கவேண்டாம்என்றும்அப்படி அழைத்தாலும் வரமாட்டோம் என்றும் அந்தக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் ஜனாதிபதியிடம் நேரில் தெரிவித்திருந்தார்.

ஜுலை மாதத்திற்குள், ஏற்கனவே வாக்குறுதியளிக்கப்பட்ட அனைத்து விடயங்களுக்கும் தீர்வு காணப்படும் என்று அந்தக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருந்தார். அந்த உறுதிமொழியும் நிறைவேற்றப்படாத நிலையில் மீண்டும் தமிழ்க் கட்சிகள் பேச்சுக்கு அழைக்கப்பட்டுள்ளன.

### சுகாதார அமைச்சருக்கு எதிரான

# நம்பிக்கை இல்லாத் தீர்மானம் குறித்து மற்றக் கட்சிகளுடன் சஜித் இன்று பேச்சு

சுகாதார அமைச்சர் ஹெகலியரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்துவார் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்முஜிபுர்ரஹ்மான்தெரிவித்தார்.

ஜே.வி.பி. உட்பட சகல எதிர்க்கட்சிகளும் இவ்விடயத்தில் ஒரே நிலைப்பாட்டில் முழுமையானஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கொழும்பில்உள்ளஎதிர்க் கட்சிதலைவர்அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலவச சுகாதார சேவை பெருமளவில்மோசமடைந்து செல்கிறது. தனியார் வைத்தியசாலைகளைக் கண்காணிப்பதற்கான நிறுவனமொன்று காணப்படுகின்றபோதிலும், அரச வைத்தியசாலைகள் எவ்விதக் கட்டுப்பாடும்இன்றிஇயங்கிக்கொண்டிருக்கின்றது.

அதேபோன்று தனியார் மருந்தக மாபியாக்களின் தேவைக்கேற்ப மருந்து ஒழுங்குபடுத்தல்அதிகாரசபை செயற்பட்டு வருகின்றமை பெரும் அழிவாகும்.

இவர்களின் செயற்பாடுகளால் நோயாளர்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது, அது தொடர்பில் முறைப்பாடு அளிப்பதற்குக்கூட வாய்ப்பில்லை.

சுகாதாரத்துறையில் காணப்படும்பிரச்சினைகளை மறைப்பதற்காக குழுக்களை நியமிக்கின்றனர். குழுக்களின் ஊடாகஇவற்றைநீண்டகாலத்துக்கு மறைக்க முடியாது என்பதை அமைச்சர் நினைவில் கொள்ள வேண்டும்.

இவர்களின் இந்த பொறுப்பற்ற செயற்பாடுகளால் பலரது உயிர் காவு கொள்ளப்பட்டுள்ளது.

கண்சத்திரசிகிச்சைக்காக சென்றவர்கள் பார்வையை இழந்து வீடுகளுக்கு செல்கின்றனர். இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சுகாதார அமைச்சரும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

இவர்களிடம்முறையான திட்டமிடல்கள் இல்லாததன் காரணமாகவே சுகாதாரத் துறைமுற்றாகவீழ்ச்சியடைந்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி சுகாதாரத்துறைக்காக வழங்கிய 60 மில்லியன் டொலருக்கு என்ன ஆனது?

இவ்வாறான ஆட்சியை ஜனாதிபதியால் எவ்வாறு தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியும்?

பொதுஜன பெரமுனவுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் காணப்படும் இணக்கப்பாடு காரணமாக இவை எவற்றையுமே அவர்கள் கவனத்தில் கொள்ளப்போவதில்லை. எனவே, எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்த ஆட்சியைத் தோல்வியடையச் செய்து, மக்களின் உயிரைப் பாதுகாக்கவேண்டும்.

சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிக்குமாறு ஏனைய எதிர்க்கட்சிகளுடன் சஜித் பிரேமதாஸ நாளை (இன்று) பேச்சு நடத்தவுள்ளார். இதனை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளைஅர்ப்பணிப்புடன் முன்னெடுப்போம்.

ஜே.வி.பி.. உள்ளிட்ட கட்சிகளுக்கு எதிர்க்கட்சிகள் ஒரேநிலைப்பாட்டில்செயற்பட வேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம் - என்றார்.

# நகுலேஸ்வர பிரதம குரு தனது 98 வயதில் மறைவு

### அரச மரியாதையுடன் அவரது இறுதி நிகழ்வு

பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றானகீரிமலைநகுலேஸ்வரம் ஆலய பிரதம குருவும், ஆதீன கர்த்தாவும் ஆகிய கலாநிதி ராஜ ராஜ ஸ்ரீ சிவஷ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள்சனிக் கிழமை நள்ளிரவு தனது 98ஆவது வயதில் இறைபதமடைந்தார்

அவரது இறுதிக்கிரியைகள் அரச மரியாதைகளுடன் இடம்பெற்றன. நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, இறுதி ஊர்வலம் 3.00 மணிக்குத் தொடங்கியது. கீரிமலை இந்து மயானத்தில்



இவரது உடல் தீயுடன் சங்கமமாகியது. அதற்கு முன்னதாக பொலிஸார்வானத்தைநோக்கி மூன்று தடவைகள் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து அரசு மரியாதை செலுத்தினர்.



இவர் 1925 மே /27 நகுலேஸ்வரத்தில் குமாரசுவாமிக் குருக்கள் - அன்னம்மா தம்பதிகளுக்கு மகனாக பிறந்தவர். இவர் வேதநாயகியம்மாவை மணம்முடித்துஎட்டுகுழந்தைகளையும் பெற்றெடுத்தார்

1948 ஆம் ஆண்டில் இருந்துநகுலேஸ்வரர் ஆலய ஆதின கர்த்தாவாக 75 வருடங்கள் தொண்டாற்றியவர்

இராஜராஜசிறி நகுலேஸ்வரானுக்கிரக வித்தியாதரர் சிவாகம கலாநிதி வேத சிவாகமவிற்பன்னர் போன்ற பட்டங்களைப் பெற்றவர்.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணை போக முடியாது. ஆகையினால் இந்த அழைப்பை நிராகரித்து சந்திப்பிற்கு நாம் செல்லப் போவதில்லை.

ஈழத்தமிழர்களுக்கு எதிராக ஒருபுறம் சிங்கள மயமாக்கல் மற்றும் பௌத்த மயமாக்கல் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. மறுபுறத்தில் தமிழர்களை அச்சுறுத்தி அடக்கி ஒடுக்கும் செயற்பாடுகளும் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த சில தினங்களிற்கு முன்னர்கூட நீதிமன்ற அனுமதியுடன்பூஜைவழிபாட்டிற்காகச் சென்றபோது நீதிமன்ற உத்தரவையும் மீறி தமிழர் தரப்பை அடித்து உதைத்துவிழுத்தி அராஜகம் புரிந்திருக்கின்றனர்.

இத்தகைய அராஜகங்களையோ அடக்குமுறைகளையோ தடுத்து நிறுத்த முடியாத ஜனாதிபதி தனது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காக இந்தியா செல்ல முன்னர் பேச்சிற்கு அழைத்துள்ளார்.

இவ்வாறு அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும்செய்துகொண்டே பேச்சு என்றால் அது ஒரு போதும் சாத்தியமில்லை. இவ்வாறான ஏமாற்று நடவடிக்கைகளுக்குதுணை போக நாம் தயாரில்லை - என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# இழப்பீடு வழங்கப்படுமென கூறும் அமைச்சர் தனது தவறையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்

## ஓமல்பே சோபித்த தேரர் கருத்து

நாட்டின் சுகாதாரத்துறையில் பாரிய வீழ்ச்சியும்பேரழிவும்ஏற்பட்டுள்ளது. தரமற்ற தடுப்பூசிமற்றும்மருந்துஇறக்குமதிகாரணமாக பாதிக்கப்பட்டுள்ள தரப்பினருக்கு இழப்பீடு வழங்கப்படுமென கூறும் சுகாதாரத்துறை அமைச்சர் தனது தவறையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இழப்பீடுகளை அமைச்சர் மற்றும் சுகாதாரத்துறையின் அதிகாரிகள் தமது தனிப்பட்ட சொத்துக்களிலிருந்தே வழங்கவேண்டும் என ஓமல்பே சோபித்த தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

மருந்து தட்டுப்பாடு, தரமற்ற மருந்து பயன்பாடுகள் தொடர்பில் சுகாதாரத்துறை அமைச்சர்மற்றும்சுகாதாரத்துறைஅதிகாரிகள் கூறும்கருத்துக்களைஏற்றுக்கொள்ளமுடியாது.

நாட்டின் சுகாதாரத்துறையில் பாரிய வீழ்ச்சியும் பேரழிவும் ஏற்பட்டுள்ளது. நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக அரச வைத்தியசாலைகளுக்கு நம்பிச் செல்ல முடியாத பயங்கரமான நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவசர மருந்து கொள்வனவு எனும் போர்வையில் தரமற்ற தடுப்பூசி மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்ததன் காரணமாக சுகாதாரத்துறையில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நட்ட ஈடு பெற்றுத் தருவதாக அமைச்சர் கூறுகிறார். சிலர் இது சிறந்த தீர்மானம் எனக் கருதலாம். இருப்பினும், நட்ட ஈடு அமைச்சரின் தனிப்பட்ட பணத்திலிருந்தே வழங்கப்பட வேண்டும். அதனை விடுத்து, அரச திறைசேரியிலிருந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதைஅமைச்சர்புரிந்துகொள்ளவேண்டும்.

இதேவேளை பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்படும் என கூறுபவர், தான் செய்த தவறையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமல்லவா?

தவறு என்ன? தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தமை மற்றும் குறித்த தரப்பினருக்கு அனுமதி வழங்கியமையாகும்.




தரமற்ற மருந்துகள் மூலம் உயிரிழுந்தவர்கள் மற்றும் அவர்களது உறவினர்களுக்கு நிச்சயம் இழப்பீடு பெற்றுக்கொடுக்க வேண்டும். அந்த இழப்பீடு மருந்து இறக்குமதிக்காக அமைச்சர் அரச அதிகாரிகள் மற்றும் அவரை சார்ந்த தரப்பினர் பெற்றுக்கொண்ட இலஞ்ச பணத்திலிருந்தும், தமது வங்கிக் கணக்குகளில் சேமித்து வைத்துள்ள பணத்திலிருந்தும் வழங்கப்பட வேண்டும்.

பொறுப்பில் உள்ளவர்கள் தமது தனிப்பட்ட சொத்துகளிலிருந்து பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இழப்பீடு வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படவில்லை எனின் எதிர்காலத்தில் தமது உயிர், உடைமைகளை இழந்து இழப்பீடு வழங்கும் நிலைமை நிச்சயம் ஏற்படும்.

மேலும், பொறுப்பற்றவர்கள் பொறுப்புகளில் அமர்வதற்கு நாட்டு மக்கள் எதிர்காலத்தில் அனுமதி வழங்க மாட்டார்கள். - என்றார். (05)

# விசா இன்றி நாட்டில் தங்கியவர் கைத!

இந்தியாவில் இருந்து சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து, விசா இன்றி இரண்டு வருடங்களாக வாழ்ந்துவந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த நபரொருவரை மட்டக்களப்பு நகரில் வைத்து சனிக்கிழமை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் நண்பர் ஒருவருடன் குறித்த நபர் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அதனையடுத்து, அவர்களை பொலிஸார் விசாரித்த போது குறித்த நபர் விசா இன்றி கடந்த 2 வருடங்களாக இலங்கையில் தங்கியிருப்பது தொடர்பில் தெரியவந்துள்ளது.

தமிழ்நாட்டின் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த செல்லப்பன் செல்வதுரை என்ற அந்த நபர் கடந்த 2021ஆம் ஆண்டு சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்தது முதல் இதுவரை யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோவில் பகுதியிலேயே தங்கியிருந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், கைதான நபரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனமை குறிப்பிடத்தக்கது. (05)

# யானை - மனித மோதல்களின் சாவு எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் யானை - மனித மோதலினால் ஏற்படும் இறப்பு விகிதம் ஒவ்வொரு ஆண்டும் பாரிய அளவில் அதிகரித்து வருகிறது. கடந்த வருடம் யானைகளால் 146 கிராம மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.



இதனை, அநுரா தபுரத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, 2021ஆம் ஆண்டில் குறைந்தது 375 யானைகளும், 2022 இல் 439 யானைகளும் கொல்லப்பட்டுள்ளன. மின்சார பொறிகள், பட்டாசுகள் வெடிக்கும் கருவி, கூரான பலகைகள் மற்றும் விஷம் வைத்தல் ஆகியவற்றால் காட்டுயானைகள் கொல்லப்படுகின்றன என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், பல யானைகள் ரயிலில் சிக்கியும், பாதுகாப்பற்ற கிணறுகளில் வீழ்ந்தும் உயிரிழக்கின்றன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

2016 இற்குப் பிறகு பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான செலவு மற் றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் பெருமளவில் அதிகரித்துள் என என அவர்கள் சுட்டிக் காட்டினர்.

அதேவேளை, மின்சார வேலிகள் அமைத்தல், யானைகளை விரட்டும் வகையில் அதிரடி சோதனை நடத்துதல், பட்டாசுகளை வழங்குதல் போன்றவற்றுக்கு வருடத்துக்கு அரசாங்கத்தால் சுமார் 20 கோடி ரூபா பணம் செலவழிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளனர். (05)

# இலங்கையில் மருந்துகளின் தட்டுப்பாடுகள் காரணமாக பாதிப்பு ஏற்படுத்தும் மருந்துகளை பாவிக்கும் நிலைமை

## நளிந்த ஜெயதிச விளக்கம்



மருந்து தட்டுப்பாடு காரணமாக மருத்துவர்கள் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய மருந்துகளை பயன்படுத்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

பேராதனை மருத்துவமனையில் இளம்பெண் உயிரிழந்தமைக்கு மருந்து தட்டுப்பாடே காரணம் என தேசிய மக்கள் சக்தியின் நளிந்த ஜெயதிச தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக கடும்பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய மருந்துகளை பயன்படுத்த வேண்டியநிலைக்கு மருத்துவர்கள் ஆளாகியுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மருந்து தட்டுப்பாடு காரணமாக அதிகாரிகள் தரம்குறைந்த மருந்துகளை கொள்வனவு செய்கின்றனர் நோயாளர்களின் உயிர்களிற்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றனர் '' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில மருத்துவமனைகள் புரொபோல் என்ற மருந்தினை பயன்படுத்துகின்றன இந்த மருந்து கடும் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியது என பல மருத்துவமனைகள் தெரிவித்துள்ளன எனவும் நளின் ஜெயதிச தெரிவித்துள்ளார்.

இந்த வகை மருந்து குறித்து மே 15 ஆம் திகதி ஹோமாஹம மருத்துவமனை அறிவித்துள்ளது ஆனால் நடவடிக்கைகள் எதனையையும் சுகாதார அமைச்சு எடுக்கவில்லை, இதேகாலப்பகுதியில் தெல்தெனிய மாத்தறை மருத்துவமனைகளும் இந்த மருந்து குறித்து சுட்டிக்காட்டியுள்ளன, பேராதனை மருத்துவமனையின் மயக்கமருந்து நிபுணர் இந்த மருந்து குறித்து சுட்டிக்காட்டியுள்ளார், கொழும்பு தேசிய கண் மருத்துவமனையில் உயிரிழப்பு ஏற்படும்வரை எந்த நடவடிக்கையும் இடம் பெறவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசமருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவது சத்திரகிசிச்சை செய்து கொள்வது குறித்து மக்கள் குழப்பத்தில் உள்ளனர் அரசாங்க மருத்துவமனைகள் மீது நம்பிக்கை இழந்துவிட்டனர் என தெரிவித்துள்ள அவர் இந்த சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு பொதுமக்களுக்கு உண்மையைதெரியப்படுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (05)

# அமைதியை கட்டியெழுப்புதல் நீங்கள் கருதுகின்றமை என்ன?

## அலி சப்ரியிடம் அம்பிகா சற்குணநாதன் கேள்வி



தமிழ்ச் சமூகத்துக்கு எதிராக பல்வேறு மீறல்கள் இடம்பெற்றுவரும் பின்னணியில் ''சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்'' என்பதால் நீங்கள் கருதுவது என்ன? என்று இலங்கை மனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதன் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுவரும் நிலையில், இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிஸுகொஷி ஹிடேகி, சுவிற்ஸர்லாந்து தூதுவர் மொமினிக் ஃபக்ளெர் மற்றும் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் சன்டைல் எட்வின் ஸ்கால்க் ஆகியோருக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி இவ்வனைத்து தரப்புக்களுடனும் மிக நெருக்கமாக பணியாற்றுவதற்கான வழிமுறைகள் குறித்தும், இந்த இலக்கை அடைந்துகொள்வதில் இலங்கைக்குவழங்கக்கூடிய உதவிகள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் அலி சப்ரி அவரது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவை மேற்கோள் காட்டி, தனது ருவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே அம்பிகா சற்குணநாதன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அமைச்சரே, தமிழ்ச்சமூகத்துக்கு எதிராக பல்வேறு மீறல்கள் இடம்பெற்றுவரும் பின்னணியில் "சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்" என்பதால் நீங்கள் கருதுவது என்ன என்று விளக்க முடியுமா? உண்மையைக் கண்டறியும் நோக்கில் கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் எவையும் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், பாதிக்கப்பட்ட தரப்பினர் அரசாங்கத்தை நம்பவேண்டும் என்று நீங்கள் எவ்வாறு எதிர்பார்க்கின்றீர்கள்?" என்றும் அவர் வினவியுள்ளார்.

மேலும், ''நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்குரிய அடிப்படை நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் ஊடாக உங்களுடைய அரசாங்கம் அதன் நம்பகத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும் அல்லவா? பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்திய எந்தவொரு செயன்முறை என்றாலும், அது குறித்து அவர்களுடன் கலந்துரையாடப்பட வேண்டும் அல்லவா?

சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான செயன்முறை செயற்திறன் மிக்கதாக அமைய வேண்டுமாயின், தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை முடிவுக்கு கொண்டுவருவது அவசியமல்லவா?" என்றும் அம்பிகா சற்குணநாதன் கேள்வி எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# சகவாழ்வு சங்கங்கள் ஒன்றிணைந்த கலாசார நிகழ்வும், கருத்துக்களமும்

மனித அபிவிருத்தி தாபனத்தால் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஒத்துழைப்புடன் கனடா பங்காளர் நிறுவன அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயற்றிட்டம் அம்பாறை மாவட்டத்தில் சகவாழ்வுச் சங்கங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஓர் அங்கமாக சகவாழ்வு சங்கங்கள் ஒன்றிணைந்த கலாசார நிகழ்வும், கருத்துக்களமும் கல்முனை கிறிஸ்டா இல்லத்தில் மனித அபிவிருத்தி தாபன அம்பாறை மாவட்ட உதவி இணைப்பாளர் எம்.ஐ. றியால் தலைமையில் நடைபெற்றது.

கலாசார நிகழ்வுகளுடன் கூடியதாக நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.ஏ. அப்துல் அஸீஸ் உட்பட பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள், வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், இளைஞர் சமூக அமைப்புக்களின் பிரதானிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள், பாடசாலை அதிபர்கள், மத போதகர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டத்தின் ஊடாக சகவாழ்வு சங்கங்களின் இயலுமையை மேம்படுத்தி அதன் ஊடாக மொழி உரிமைகள், மொழிக்கொள்கை அமுலாக்கம், சமூகங்களுக்கிடையிலான நல்லுறவை வலுப்படுத்தல் போன்றவற்றை இலக்காகக் கொண்ட செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிகழ்வு பல்லின சமூகங்களின் கலாசாரத்தை வெளிப்படுத்தும் நிகழ்வாகவும், பிராந்தியத்தில் சமூக ஒருமைப்பாடு, இரண்டாம் மொழி கல்வியின் முக்கியத்துவம், மொழிக்கொள்கை அமுலாக்கத்தின் நிலைமைகள் தொடர்பான கருத்துக்களாகவும் நடைபெற்றது. (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கண்கெட்ட பின்னர் சூரிய வணக்கம்

இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுக்கள் இப்போது அதிகம் அடிபடத் தொடங்கியிருக்கின்றன. சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் நடந்துள்ளது. அதில் பல தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் அல்லது பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் 13ஐ நடைமுறைப்படுத்திக்கொண்டு அதிலிருந்து தமிழர்கள் விரும்பும் தீர்வு ஒன்றை நோக்கி நகரவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். அதே கருத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டபீடத் தலைவரும் அந்தக் கூட்டத்தில் வலியுறுத்தியிருந்தார்.

வடக்குமாகாணமுன்னாள்முதலமைச்சர்க.வி.விக்னேஸ்வரன்கூட அந்தக் கூட்டத்தில் மாகாண சபைகளுக்கான சட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார். சமஷ்டியைப் பெறுவதாயின் நாம் இன்னும் போராடவேண்டும், அதற்கு முன்னதாக இருக்கின்ற 13ஐப் பாதுகாப்பது அவசியம் என்று தெரிவித்தார்.

சில ஆண்டுகளுக்குள்ளாகவே தமிழ்த் தலைவர்களின் அரசியல் கருத்துக்கள் எவ்வளவு தூரம் மாறிவிடுகின்றன என்பது கவலை தருவதாக இருக்கின்றது. 2013 வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட்டபோதும் சரி, அதன் பின்னர் வென்று முதலமைச்சராகப் பதவி வகித்த போதும் சரி நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்து வந்த முக்கிய கருத்து 13 ஒரு அதிகராரமற்ற வெற்று அமைப்பு என்பதை இந்த உலகிற்கு நிரூபிப்பதற்கே இந்தப் பதவியை ஏற்கின்றேன் என்பதாகும்.

அதாவது, இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின்படி உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் சட்டமான அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் மூலம்தமிழர்களுக்குஉண்மையில்அதிகாரங்கள்வழங்கப்படவில்லை, அது தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வாக இருக்கப்போவதில்லை என்பதை வெளி உலகுக்கு தெளிவுபடுத்துவதற்காகவே தான் முதலமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்கிறார் என்று அவர் தெரிவித்திருந்தார். அவரது ஆட்சிக் காலம் முழுவதும் அவர் அந்த நோக்கத்துடனேயே அரசியலை முன்னெடுத்தும் வந்தார். இதனால் மாகாண சபையால் செய்திருக்கக்கூடிய விடயங்களைக்கூட அவர் செய்யத் தவறினார் என்கிற கடுமையான விமர்சனங்களை அவர் எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

இன்று அதே விக்னேஸ்வரன், 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று அந்த நாட்டின் தலைமை அமைச்சர் மோடிக்குக் கடிதம் எழுதுகிறார் என்பதை எப்படிப் புரிந்துகொள்வது?

அதாவது எந்தவித அதிகாரங்களும் அற்ற ஒன்று என்று மாகாண சபைகளை வெளி உலகிற்கு நிரூபிக்க வந்தவர் இன்று அதையாவது தாருங்கள் என்று கையேந்தும் அரசியல் நிலைப்பாட்டுக்கு வந்திருக்கிறார். இதனைத்தான் கண்கெட்ட பின்னர் சூரிய வணக்கம் என்பது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கையில் எந்தவொரு தமிழ்க் கட்சியும் எதிர்ப்பில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. கொள்கையளவில் 13ஐ தீவிரமாக எதிர்க்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிகூட நடைமுறையில் அதனை ஏற்பதற்குத் தயாராகவே இருக்கிறது. இதற்கு முன்னைய மாகாண சபைத் தேர்தல்களைப் புறக்கணித்து வந்த முன்னணி, கடைசியில் அடுத்துவரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடப்போவதாகத்தான் அறிவித்தது. தவறானவர்களின்கைகளில்மாகாணசபைஅதிகாரம்செல்லக்கூடாது என்பதற்காகவே அப்படிச் செய்யப்போவதாகவும் தெரிவித்திருந்தது. ஆக மொத்தத்தில் 13ஐ முற்றிலுமாக நிராகரிப்பவர்கள் என்று ஒருவருமில்லை.

இலங்கையின் அரசமைப்பில் உள்ள அதனை நடைமுறைப்படுத்துவது ஆட்சியாளர்களின் கடமை. அதைச் செய்யவில்லை என்பது சட்டப்படி குற்றம். அப்படியிருக்க, அதனை முதன்மைப்படுத்தி ஈழத் தமிழர்களின் அரசியலை முன்னகர்த்த எடுக்கப்படும் எந்தவொரு முயற்சியும் தற்கொலைக்கு ஒப்பானது. அதாவது ஒன்றுமேயில்லை என்று நிராகரித்த ஒன்றை 35 ஆண்டுகள் கழித்து அதில் உள்ளவற்றை திறம்படக் கையாள்வதன் மூலம் நாம் சில அதிகாரங்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று மக்களை நம்பவைக்க முயற்சிப்பது படு போக்கிரித்தனம். தலைவர்களுக்கு அரசியல் தெளிவு இல்லை என்கிற நிலையைக் காட்டி நிற்கின்றது.

13ஐப் பெற்று அதிலிருந்து முன்னேற முடியும் என்றால் 35 வருடங்களுக்கு முன்னரே அதனை முழுமையாக ஏற்றுக்கொண்டிருக்கவேண்டியதுதானே. விடுதலைப் புலிகள் அதனை நிராகரித்தார்கள், அதனால்தான் அது சாத்தியமாகவில்லை என்று சாட்டுச் சொல்லக்கூடாது. ஏனெனில் தமிழ் மிதவாதத் தலைவர்கள் அனைவருமே அன்று மாகாண சபைகளை எதிர்த்தார்கள். அது தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வின் அடிப்படையாகக்கூட இருக்கமுடியாது என்றவர்கள். 35 ஆண்டுகள் கழித்து இந்த நிலைப்பாட்டைத் தமிழர்த் தலைவர்கள் மாற்றிக்கொள்கிறார்கள் என்றால், அவர்கள் அரசியல் தெளிவற்றவர்கள் என்றுதானே பொருள்?

# ஆடியும் அருமையான மாதமே !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .... ஆஸ்திரேலியா



பன்னிரெண்டு மாதங்களும் வருகின்றன. போகின்றன. சில மாதங்களை சிறப்பென்றும் , சிலவற்றை ஒதுக்கிப் பார்ப்பதும் இயல்பாகி விட்டது. ஆனால் அப்படி ஒதுக்க வேண்டியது - மனத்தில் எழுகின்ற ஒருவித மயக்கம் என்றே எண்ண வேண்டி இருக்கிறது. எல்லாமாதங்களும்ஏதோஒருவிதத்தில் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு தான் வருகின்றன.மார்கழியைப் பீடை பிடித்த மாதம் என்கிறோம். புரட்டாசியையும் ஒரு பக்கம் தள்ளியே வைக்கிறோம்.ஆடியை மங்கலம் அற்ற மாதம் என்கிறோம். பங் குனியை, சித்திரையை, தையை, ஆவணியைக் கொண்டாடி வரவேற்கிறோம்.இப்படி நோக்குவது எங்களிடம் இயல்பாகி விட்ட நிலையில் ; மங்கலம் இல்லா மாதமாக எடுத்துக் கொள்ளும் ஆடி எங்களை நாடி வருகிறது ! வருகின்ற ஆடியை விட்டு விட்டுவிலகத்தான்எங்களால்முடியுமா? முடியவே முடியாது ! நாடிவரும் ஆடி பற்றி பார்ப்போமா வாருங்கள் !



ஆடிஎன்றவுடன் -ஆடிச்செவ்வாய், ஆடிவெள்ளி, ஆடிப்பூரம், ஆடிக்கார்த்திகை, ஆடித் தபசு, ஆடிப்பெருக்கு, ஆடி அமாவாசை, ஆடிப் பௌர்ணமி , என்று இறைவழிபாட்டுடன்இணைந்ததாகஆடி மாதம் முழு வதும் அமைந்திருப்பதை நாமனைவரும் மனமிருத்த வேண்டியது அவசியம். ஆடி மாதத்தை அம்மனின் மாதம் என்பதையும் அகமிருத்தல் மிகவும் அவசியமேயாகும்.அப்படி இருக்க ஆடியை நாடாமல் ஒதுக்கிப் பார்ப்பது முறையா ?

மார்கழியில் திருவெம்பாவை வருகிறது.ஆண்டாளின்திருப்பாவையும், மணி வாசகரின் திருவெம்பாவையும் மார்கழியில் கோவில்களில் பக்தி சிரத்தையுடன் பாடப்படுகிறது. வைணவர்களும் , சைவர்களும் கொண்டாடும் மாதமாய் மார்கழி இருக்கிறது. மாதங்களில் நான் மார்கழி என்று கீதையில் கண் ணனே சொல்லுவதுதையும் கருத்திருத்த வேண்டும். புரட்டாசியில் நவராத்திரி வருகிறது. கலைகளைப் போற்றும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.சமயமும் கலைகளும் சங்கமிக்கும் மாதமாய் புரட்டாசி விளங்குகிறது.ஆடி,புரட்டாசி, மார்கழி இறை வழிபாட்டுக்குரியமாதங்களாகும்.அப்படி என்றால் மற்றைய மாதங்கள் இறை வழிபாட்டுக்கு ஏற்றன அல்லவா என்று வினா எழுகிறதல்லவா ? ஆடி, புரட்டாசி, மார்கழி மாதங்களில் மங்கலமான நிகழ்வுகளான - வீடு குடுபுகுதல், திருமணம், திருமணநிச்சயார்த்தம், காதுகுத்தல், எதையும் செய்வதில்லை. காரணம் - இம்மாதங்கள் தேவர்களுக்கு உரிய மாதங்கள்.மனிதர்களுக்கும்அவர்களின் இன்பங் களுக்கும் உரிய மாதங்கள் அல்ல என்பதுதான் காரணம்.

சூரியனைஅடிப்படையாகக்கொண்ட மாதங்கள்தான் நம்முடைய தமிழ் மாதங்கள்.கடக ராசியில் சூரியன் சஞ்சரிக்கும்காலம்தான் ஆடிமாதம்.ஆடி மாதம் தொடங்கி மார்கழி மாதம் வரையான ஆறு மாதங்களும் சூரியன் - தன்னுடைய வடக்கு நோக்கிய பயணத்தை முடித்துக் கொண்டு தெற்கு நோக்கி பயணிக்கி றார்.தெற்கு என்பது பித்ருக்களுக்கு உரிய திசையாகும். இதனால் இம்மாதத்தை பித்ருக்குகளுக்கு வழி பாடாற்றும் மாதமாயும் கொள்ளும் நிலை ஏற்பட்டது.

மனிதர்களுக்கு ஓராண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும்.ஆடி தொடங்கி மார்கழி வரையான ஆறு மாதங்களும் சூரியனின் தெற்கு நோக்கிய பயணமாகும். தை தொடக்கம் ஆடிவரையான ஆறு மாதங் களும் சூரியனின் வடக்கு நோக்கிய பயணமாகும்.வடக்கு நோக்கிய பயணக் காலத்தில் வெப்பம் அதிக மாய் இருக்கும்.தெற்கு நோக்கி சூரியன் பயணிக்கும்பொழுதுவெம்பம்தணிந்து காற்று, மழை, பனி என்னும் காலநிலை வந்துநிற்கும்.தெற்குநோக்கியசூரியனின் பயணக்காலம்தேவர்களுக்குஇராக்காலமாகும். அதாவது ஆடி என்பது தேவர்களின் இராக்கால தொடக்கமாகும். மார்கழி என்பது தேவர்களுக்கு விடியல் காலமாகக் கருதப்படுகிறது. ஆடி இரவின் தொடக்கம். மார்கழி விடியலின் தொடக்கம்.

ஆடியில் சூரியன் கடகராசியில் சஞ்சரிக்கிறார் என்று பார்த்தோம்.கடகராசி என்பது சந்திரனின் ஆட்சி வீடாகும். சூரியன் சிவனின் அம்சமாகும். அந்தச் சூரியன் சக்தியின் அம்சமானசந்திரனில் சஞ்சாரம் செய்யும் நிலை இக்காலத்தில் அமைகிறது. இதனால் சந்திரனின் ஆளுமை அதிகரிக்கிறது. இப்படி ஆவதால் ஆடி மாதம் என்பது சக்தியின் மாதமாய் விளங்குகின்றது. அக்காரணத்தால்தான் அம்மனின் மாதம் - ஆடி என்று ஆகிவிட்டது. அம்மனுக்கு உகந்த விழாக்கள் இம்மாதத்தில் முக்கியத்துவம் பெறுவது இதனால்த்தானோ என்று எண்ணிட வைக்கிறது.

அறிவியல் வழியில் சிந்திப்பதும் உகந்ததாகும். ஆடி மாதம் காற்றுக் காலமாகும். காற்றினால் பரவும் நோய்கள் அதிகரிக்கும் காலமாகவும் இக்காலம் அமைகிறது. இதனால், வேப்பிலை, மஞ்சள் என்பவற்றை வழிபாடு என்ற வகையில் அம்மனுக்கு உரியதாக்கி நிற்பதும் நோக்கத்தக்கது. அத்துடன் கூழ் காய்ச்சு வதும் , அம்மனுக்கு வைத்து வழிபடுவது கூட அறிவியலைஆன்மீகத்துடன் இணைக்கும் நிலையினையே காட்டுகிறது அல்லவா !

ஆடி மாதத்தை கணக்கிட்டுத்தான் பண்டிகைகளின்தொடக்கமேஅமைகிறது என்பதும் நோக்கத்தக்கது. கிராமங்கள் தோறும் அம்மனுக்குரிய விழாக்கள் நடைபெறுவதும் மனமிருத்த வேண்டியதே. அம்மனைப் பல நிலைகளில் வழிபடுவதும் நோக்கத்தக்கது. காவல் தெய்வமாய் கருதி போற்றி வழிபாடுகளில் ஈடுபடுவதையும் ஆடியில் காணக்கூடியதாய் இருக்கிறது.

ஆடியில் ஆறுகளில் நீர்ப்பெருக்கு வருவதை அனைவரும் கொண்டாடி மகிழ்கின்றார்கள். இதனையே ஆடிப்பெருக்கு என்று அகமகிழ அழைக்கின்றார்கள்.சுமங்கலிப் பெண்கள் தங்களின் தாலிக்கயிற்றை மாற்றுவதும், அம்மனுக்கு படையில் வைத்து ஆராதிப்பதும் இவ்வேளை இடம் பெறுகிறது என்பதும் மனங்கொள்ளத் தக்கதாகும்.

பெண்கள் விரும்பி அனுட்டிக்கும் விரதமான வரலட்சுமி விரதம் ஆவணி மாதத்துக்குரியதாய் இருந்தாலும், பெரும்பாலனசமயங்களில்ஆடிமாதத்தில் வரும்வெள்ளிக்கிழமைகளில்வருகிறது. ஆடி வெள்ளியில் மாரியம்மனுக்கு தேர்த்திருவிழா, தெப்பத்திருவிழா , தீமிதிப்பு எல்லாம் நடக்கும். அருள் மாரியாய் கருமாரி விளங்கிறாள் அல்லவா? சின்னக் கோவில்கள், பெரிய கோவில்கள் எல்லாம் இந்த விழாக்கள் நடை பெறுவதும் நோக்கத்தக்கது.

ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசையும் , தையில் வருகின்ற அமாவாசையும், கடலில் நீராட உகந்த தினங்களாகும்.தஷிணாயனபுண்ணிய காலம், உத்தராயன புண்ணிய காலம் என்று இக்காலங்களைச் சிறப்பித்துச் சொல்லுவார்கள்.


இறைவனை அடைவதற்கு அன்னை பராசக்தி தவம் செய்ததும் ஆடி மாதத்தில்த்தான்.சூடிக்கொடுத்த சுடர்கொடியான ஆண்டாள் நாச்சியார் ஆடியில்த்தான் அவதரிக்கின்றார்.சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவன் அழைத்துக் கொண்டதும் ஆடியில்த்தான் என்பதும் அகமிருத்த வேண்டிய கருத்தெனலாம்.


தையினை பொங்கல் திருநாளாய், அறுவடைத் திருநாளாய் கொண்டாடுவதற்கு வித்திடப்படுவதே ஆடியில்த்தான். ' ஆடிப்பட்டம் தேடி விதை' என்னும் பழமொழியே ஆடியில் விதைத்தால்த்தான் தையில் அறுவடை செய்ய முடியும் என்பதைக் காட்டி நிற்கிறதல்லவா ?

ஆடிச் செவ்வாயினை மையமாய் கொண்டு ' ஆடிச்செவ்வாய் தேடிக்குளி - அரைச்ச மஞ்சளைப் பூசிக்குளி ' என்னும் முதுமொழியும் பழக்கத்தில் இருக்கிறது.

ஆடி தெய்வீக மாதம். அம்மனின் மாதம், என்றெல்லாம்போற்றப்பட்டாலும் புதுமணத் தம்பதிகளுக்கு மட் டும் வெறுப்பான மாதமாய் இருக்கிறது. அவர்களுக்கு மட்டும் ஏன் வெறுப்பாய் இருக்கிறது என்பதையும் அறிவதும் அவசியம் அல்லவா ! மணமான தம்பதிகளைப் பிரித்து விடுவார்கள். அதாவது பெண்ணைப் பிறந்த வீட்டு அனுப்பி விடுவார்களாம். சாஸ்த்திரம் என்று சொன்னாலும் - இங்கே எங்களின் முன்னோர் களின் நல்ல சிந்தனையும் கலந்தே இருக்கிறது. ஆடியில் கருவுற்றால் - பத்தாவது மாதமான சித்தியிரையில் பிரசவம் நடக்கும். சித்தியிரையில் புத்திரன் பிறந்தால் தந்தைக்கு நல்லதல்ல என்னும்கருத்துசாதரணமாகசமூகத்தில் நிலவுகிறது. இது எந்தளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை. சித்திரையில் கத்தரி வெயில் என்பதை அனைவரும்








தொடர்ச்சி 6ம் பக்கம்...


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=



உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்விழி நயனம்

# அமா சோமவாரமும் ஆடிப்பிறப்பும்



இந்த சோபகிருது வருடம் ஆடி முதல் நாள் 17.07.2023 திங்கட்கிழமை வழிபாட்டுக்கு மிகவும் உகந்த நாளாக அமைகிறது.

அன்றைய நாள் ஆடிப்பிறப்பு நாளாக, கடக சங்கிராந்தியாகவும் தட்சணாயண ஆரம்பமாகவும் கருதப்படுகிறது.

தவிரவும் இந்த ஆண்டு ஆடி மாதத்தில் இரண்டு அமாவாசை வருகிறது. இரண்டுமே ஆடி அமாவாசை தான். இரண்டுமே பிதிர் வழிபாட்டுக்கு உரிய தினங்கள் தான் என்றாலும் அதில் இரண்டாவது அமாவாசையே எம் மரபில் சிறப்பாக ஆடி அமாவாசையாக கருதப்படுகிறது.

எவ்வாறாயினும் முதல் அமாவாசைக்கு வேறு ஒரு தனிச்சிறப்பு உண்டு. இது சோமவாரமான திங்கட்கிழமை அமைகிறது. எனவே இது அமா சோமவாரம் என்ற சிறப்பு மிகு நாள் ஆகிறது.

இந்த அமா சோமவாரத்தில் அரச மரத்தை பூசிப்பதும் பிரதட்சணம் செய்து வழிபடுவதும் பல்வகை நலன்களையும் தரும் என்று நூல்கள் கூறுகின்றன.

தவிர இந்த நாள் ஆடிப்பிறப்பு நாளாகிறது. இலங்கையில் ஒரு காலத்தில் ஆடிப்பிறப்புக்கு அரசவிடுமுறையே இருந்ததாம். அந்தளவுக்கு நம் முன்னோர்கள் தைப்பொங்கல் போல ஆடிப்பிறப்பை கொண்டாடிக் களித்திருக்கிறார்கள்.

ஆடிக்கூழ் மிகவும் புகழ் பெற்றது. இந்த மாதம் வெப்பம் குறைந்து மழை தொடங்குவதற்கான அறிகுறிகள் ஏற்படும் மாதம். எனவே நெல்விதைப்பை ஆரம்பிக்கும் காலமாகவும் இது காணப்பட்டது. இப்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் இதில் பெரும் செல்வாக்குச் செலுத்தியிருக்கிறது. இவை காரணமாக கல்யாணம் முதலிய விழாக்களை நிறுத்தி விவசாயம் மற்றும் வழிபாட்டுக்குரிய மாதமாக ஆடியை பிரகடனம் செய்திருக்கிறார்கள்.

இம்மாதம் அம்பிகை வழிபாட்டுக்குச் சிறப்புப் பெற்றது. இதனால் ஆடி வெள்ளி, ஆடிச்செவ்வாய் வழிபாடுகள் சிறப்புப் பெறுகின்றன. ஆடிப்பூரம் பெரும் சிறப்பு உடையது. அன்று அம்பாளுக்கு வளையல் சாற்றி வழிபடுவதும் ருதுசோபனம் செய்து மகிழ்வதும் நம் மரபு.




இதை விட இந்த மாதம் சக்தி அம்சத்தைக் கொண்டவரான முருகனுக்கும் சிறப்பு உடையது. அதனால் ஆடிக்கார்த்திகை விழாவை சிறப்பாக கொண்டாடுவர். மாவிட்டபுரம், கதிர்காமம் என்று பல்வேறு முருகன் ஆலய உற்சவங்களும் ஆடியில் நிகழும். ஆடிவேல் விழாவும் புகழ் பெற்றது.

எல்லாவற்றையும் விட, ஆடிப்பிறப்பு நம் மண்ணின் திருநாள். கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம். கொழுக்கட்டை தின்னலாம் என்று தங்கத்தாத்தா பாடும் பெருநாள்.

இந்த நாளின் தனிச்சிறப்பை உணர்வோம். பூமித்தாயையும் அண்ட சராசரம் எல்லாம் ஈன்ற அகிலாண்டேஸ்வரியான தாயை போற்றுவோம். நம் முன்னோர்களைச் சிந்தனையில் இருத்தி வந்திப்போம். இயற்கையோடு இணைந்து வாழ்வோம்.

**தி.மயூரகிரி சிவாச்சார்யார்**





# ஆடியும் அருமையான மாதமே !

4ம் பக்கத்தொடர்ச்சி....

அறிவோம் .வெப்பம் கூடிய காலத்தில் பிரசவம் நடந்தால் காலநிலை காரணமாக பிரசவிக்கும் பெண் பெரும் வேதனைக்கு ஆளாவாள். பிரசவ வேதனையுடன் வெயிலின் கொடுமையும் பெருவேதனையைத் தந்துவிடும் என்பதால் மணப்பெண்ணை பிறந்த வீட்டுக்கு ஆடியில் அனுப்பிய எங்களின் முன்னோர்களின் சிந்தனையினைப் பாராட்டாமல் இருக்கத்தான் முடியுமா?

ஆடி என்றவுடன் ஆடிவேல் விழா அகத்தினில் அமர்ந்து விடும் எங்கள் தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவரும் கட்டாயம் வந்து நிற்பார்.தாத்தாவின் வரவையும் , அவரின் ஆடிப்பிறப்பு ஆனந்தமான பாடலையும் நினைவுக்குக் கொண்டுவருவதும் நாடிவரும் ஆடி அல்லவா !

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!
பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,
வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரில் சக்கரையுங்கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்க வாயூறிடுமே

குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே

வண்ணப் பலாவிலை ஓடிப்பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

நாடிவரும் ஆடி அமங்கல மான மாதம் அல்ல ! அது தெய்வீக மாதம் ! கொழுக்கட்டையும் சாப்பிட்டு கூழும் குடித்து மகிழும் காலம். ஆடிப்பட்டம் விட்டு அம்மனை போற்றிக் கொண்டாடி , தோழர்களுடன் பாடி மகிழுவோம் வாருங்கள்.





காலைக்கதிர் Kalaikkathir

# அரகலயவின்போது வெளிநாட்டு சதித் திட்டங்கள் மேலும் பல விவரங்களை அம்பலப்படுத்துவேன்

## விமல் பகிரங்கம்



சர்வதேச சதித் திட்டங்கள் தொடர்பாக மேலும் தகவல்களை வெளியிடப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர்விமல்வீரவன்ஸ எச்சரித்துள்ளார்.

கடந்தவருடம்இடம்பெற்ற அரகலய ஆர்ப்பாட்டத்துடன் தொடர்புடைய சர்வதேச சதிகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்எனஅவர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

சதித் திட்டம் தொடர்பாக மேலும் பல தகவல்களை அம்பலப்படுத்திய பின்னர் சதித் திட்டம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்எனஜனாதிபதியை கோருவதற்காக நாங்கள் அவரை சந்திப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் எனவிமல்வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

சதித்திட்டம்குறித்தமுதற்கட்ட விவரங்களை அவர் 'ஒன்பது : மறைக்கப்பட்ட கதை' என்ற ஏப்ரல் மாதம் வெளியான நூலில் வெளியிட்டிருந்தார்.

எனினும்புதியதகவல்கள் குறித்துமேலதிகவிவரங்களை அவர் வெளியிட மறுத்துள்ளார். அவற்றைதவறாகஅர்த்தப்படுத்தலாம் என்பதால் மேலதிக வவரங்களை வெளியிட விரும்பவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்காகஅந்தவிவரங்களை முதலில் ஜனாதிபதியிடம் கையளிக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ள விமல் வீரவன்ஸ, தனது பிரசுரத்தில் உள்ள விடயங்கள் ஜனாதிபதிக்கு தெரியும். லண்டனில்சமீபத்தில்ஆற்றிய உரையில் ஜனாதிபதி, தான் தெரிவித்துள்ளவிடயங்களை ஏற்றுக்கொண்டுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எங்களிடம்உள்ளஆதாரங்களை குழப்ப விரும்பவில்லை என விமல் வீரவன்ஸதெரிவித்துள்ளார்.(05)

# நாட்டின் ஆரோக்கியமான எதிர்காலத்துக்கு டக்ளஸின் கருத்துகள் முன்மாதிரியானவை

## அமைச்சர் மனுஷ பாராட்டு



தனிச்சிங்களச்சட்டத்தைத்தொடர்ந்து அரசியல்வாதிகள் சிலரால் மொழியின் பெயரால் பிரித்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மக்கள், இலங்கையர்களாக முன்னோக்கி செல்ல வேண்டிய நிலையில், நாங்கள் ஒவ்வொருவரும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை போன்று நிதானமான முறையில் கருத்துக்களை வெளியிட வேண்டும் என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

யாழ். முற்றவெளியில் இடம்பெற்ற தொழில் சந்தை மற்றும் கண்காட்சி நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த நாட்டில் வாழுகின்ற அனைவரும் தங்களுடைய கலாசார பண்பாட்டு விழுமியங்களை பேணிப் பாதுகாக்க வேண்டியது அவசியம்.

அதேவேளை, இனம், மொழி, மதம், நிறம் போன்ற அனைத்து விடயங்களையும் கடந்து இலங்கையர்களாக சவால்களை எதிர்கொள்ளுகின்ற போதே, இந்த நாட்டின் எதிர்காலத்தை வளமானதாக மாற்றியமைக்க முடியும்.

இந்த நிலையில், மொழியின் பெயரால் அரசியல்வாதிகள் சிலரினால் பிரித்து வைக்கப்பட்டுள்ள இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு, நாம் அனைவரும் வெளியிடுகின்ற கருத்துக்கள் நிதானமானவையாக அமைய வேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்தும் கதை ஒன்றினை தெரிவித்த அமைச்சர் மனுஷ நாணயக்கார, குறித்த விடயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிடுகின்ற கருத்துக்கள் மிகவும் நிதானமானவை எனவும் அவ்வாறான பக்குவமே இந்த நாட்டுக்கு அவசியம் எனவும் தெரிவித்தார். (05)

# மாணவர்கள் துன்புறுத்தப்படுவதை தடுக்க புதிய நடவடிக்கை ஏற்பாடு

## சுரேன் ராகவன் கூறுகிறார்



கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு துன்புறுத்தல்கள் ஏற்படுவதை தடுக்க அடுத்த சில வாரங்களில் அவசர தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்படும் என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டுகருத்துதெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த தொலைபேசி இலக்கங்கள்அறிமுகப்படுத்துவதன் மூலம் ஓரளவு துன்புறுத்தல்களை கட்டுப்படுத்தமுடியும்எனஅமைச்சர் தெரிவித்துள்ளார். (05)

# சிறந்த நிர்வாக கட்டமைப்புடன் வவுனியா தனியார் பஸ் சங்கம்

## சாள்ஸ் எம்.பி. பாராட்டு



சிறந்த நிர்வாக கட்டமைப்புடன் கூடிய தலைமைத்துவத்தாலேயேஎவ்வித பிரச்சினைகளும் இன்றி வவுனியா தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் 25 ஆண்டுகளைக் கடந்துள்ளதாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம். பி. தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட தனியார்பஸ்உரிமையாளர் சங்கத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பொதுக்கூட்டமும்சங்கத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தெரிவித்ததாவது:

இன்று பல அமைப்புகள் உருவாக்கம் பெறுகின்றன. அவை சில ஆண்டுகளில் நிர்வாகசிக்கல்களால் காணாமல் போய்விடும்.

இவை சமூகத்துக்கு நல்லதல்ல. பொதுமக்களுக்கான சேவையில் ஈடுபடும் ஓர் அமைப்புஎவ்விதநிர்வாக பிரச்சனைகளும் இன்றி பல்வேறான மக்கள் பணிகளையும் செய்து வளர்ச்சி பாதையில் செல்வதென்பது பாராட்டத்தக்கது.

சிறந்த நிர்வாக திறனும் இதற்கான கட்டமைப்பும் தலைமைத்துவமுமேஅதற்கு தேவை. அது வவுனியா தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்திடம்உள்ளது. -எனவும்தெரிவித்தார். (05)

# கொக்குதொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு சர்வதேச கண்காணிப்பின்கீழ் நடக்கவேண்டும்

## வடமாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் கோரிக்கை



கொக்குதொடுவாய்மனிதபுதைகுழி

அகழ்வு சர்வதேசத்தின் கண்காணிப்பிலும் மேற்பார்வையிலும்மேற்கொள்ளப்பட வேண்டும் என வடக்கு மாகாணசபையின்முன்னாள் மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயேஇவ்வாறுஅவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில் -

இப்பொழுதும் மன்னார் புதைகுழி மறைக்கப்பட்ட ஒன்றாக வந்துள்ள நிலையில் கொக்குதொடுவாய் புதைகுழி விடயம் கூட ஊடகத்தினூடாகவே பெருமளவு மக்களின் காதுகளை சென் றடைந்துள்ளது.

இந்தகொக்குதொடுவாய்புதைகுழி, சர்வதேச நியமத்தின் அடிப்படையில் அதாவது அனுசரணையாளர்களின் மேற்பார்வையில் தோண்டப்பட வேண்டும்.

ஆயிரக்கணக்கான காணாமல் ஆக்கப்பட்டோரை அவர்களது உறவுகள் தேடிக்கொண்டு இருக்கின்றனர்.

இலங்கையைப்பொறுத்தவரையில், இந்த ஆய்வுகளின் களப்பணிக்குரிய அறிவும்ஆற்றலும்எந்தளவுக்குசர்வதேச நியமத்துக்கு உட்பட்டுள்ளது என்றொரு கேள்வியுள்ளது.

ஆகவே, சர்வதேசத்தின் கண்காணிப்பில்,அவர்களின்மேற்பார்வையில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என தனது கோரிக்கையை முன்வைக்கிறார். (05)

# பிராந்திய பொருளாதார செயற்திறன் கூட்டிணைவில் இணைய உத்தேசம்

## ஆசியான் பிராந்திய மாநாட்டில் அலி சப்ரி உரை



உலகின்மிகப்பரந்துபட்ட சுதந்திர வர்த்தக வலயமான பிராந்திய பொருளாதார செயற்திறன் கூட்டிணைவில் இணைவதற்கு இலங்கை உத்தேசித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவின் ஜகார்தா நகரில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற 30 ஆவது ஆசியான் (தென் கிழக்காசிய நாடுகளின் கூட்டிணைவு) பிராந்திய மாநாட்டில் இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான பிரதிநிதிகள் குழு கலந்து கொண்டது.

இம்மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் அலி சப்ரி, கடல் பிராந்தியப் பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவம், பாதுகாப்புடன் தொடர்புடைய நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான செயற்திட்டங்கள் என்பன உள்ளடங்கலாக இலங்கைக்கு ஒத்துழைப்பு அவசியமாக உள்ள துறைகள் தொடர்பில் சுட்டிக் காட்டினார்.

அதேபோன்று கடந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இயங்க ஆரம்பித்துள்ள உலகின் மிகப் பரந்துபட்ட சுதந்திர வர்த்தக வலயமான பிராந்திய பொருளாதார செயற்திறன் கூட்டிணைவில் உறுப்பினராவதற்கு இலங்கை உத்தேசித்திருப்பதாகவும் அமைச்சர் அலி சப்ரி இதன்போது குறிப்பிட்டார்.

ஆஸ்திரேலியா, புரூணை, கம்போடியா, சீனா, இந்தோனேசியா, ஜப்பான், தென்கொரியா, லாவோஸ், மலேசியா, மியன்மார், நியூஸிலாந்து, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்துமற்றும்வியட்நாம் ஆகிய15நாடுகளும்பிராந்திய பொருளாதார செயற்திறன் கூட்டிணைவின் ஸ்தாபக உறுப்புநாடுகளாகும்.

இம்மாதம்முதலாம்திகதியிலிருந்து இக்கூட்டிணைவில் புதிதாக நாடுகள் இணைந்துகொள்வதற்கான சந்தர்ப்பம் இருப்பதாக அறிவிக்கப்பட்டதையடுத்து, அதில் இணைவதற்கான விருப்பக்கடிதத்தைஇலங்கை கடந்த ஜூன் மாதம் 28 ஆம் திகதிஆசியான்செயலகத்திடம் கையளித்துள்ளமைகுறிப்பிடத் தக்கது. (05)

# அவசரகால நிலைமையை உடன் அறிவிக்கவேண்டும்

## மருத்துவ தொழில்துறை அமைப்பு கோரிக்கை

சுகாதார நெருக்கடி தொடர்பில் அவசரநிலையை பிரகடனம் செய்யுமாறு மருத்துவதொழில்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மருந்துகள் தொடர்பிலான பாதிப்புகளால் அதிகளவானவர்கள் உயிரிழப்பதன் காரணமாக தேசிய அவசரநிலையை அறிவிக்கவேண்டும் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் மன்றத்தின்தலைவர்வைத்தியர்ருக்சான் பெலான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவின் கடனுதவியுடன் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் தொடர்பில் சந்தேகம் காணப்படுகின்றது என தெரிவித்துள்ள வைத்தியர் ருக்சான் பெலான, இந்த விவகாரத்தை எவ்வாறு கையாளவேண்டும் என அமைச்சரவை ஆராயவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுகாதாரதுறையை சேர்ந்த ஏனைய அமைப்புகளுடன் இணைந்து இந்திய தூதரகத்தின் ஊடாக இந்தியாவிற்கு கடிதமொன்றை அனுப்பஎண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பணத்தில் மீள செலுத்தப்படவேண்டிய கடனை வீணடித்துள்ளனர் இது குற்றம் எனவும் தெரிவித்துள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் மன்றத்தின் தலைவர் வைத்தியர் ருக்சான் பெலான, சில அதிகாரிகள் கடனுதவியை துஸ்பிரயோகம் செய்யலாம் என நினைத்துள்ளனர் தாங்கள் ஆடம்பரவாழ்க்கை வாழ்ந்துகொண்டு தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்வதே அவர்களின் நோக்கம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டுபோர் காலத்தில் விடுதலைப்புலிகளின் தாக்குதலால் நிலவிய சூழல் போன்ற சுகாதார சூழல் தற்போது காணப்படுகின்றது இது ஓர் அவசரநிலை நாடு முழுவதும் புதைக்கப்பட்டுள்ள குண்டுகள் எந்நேரமும் வெடிக்கலாம் என்பது போன்ற நிலை தற்போது காணப்படுகின்றது என மேலும் தெரிவித்துள்ள அவர் இந்த விடயத்தை அரசாங்கம் மிகவும் சாதாரணமாகக் கருதுகின்றது எனவும் குற்றம்சாட்டியுள்ளார்.

(05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# அஸ்வெசும நலன்புரித் திட்டம் அரசுக்கு எதிர்காலம் இல்லை

## ஜகத் குமார சுமித்ராராட்சி எச்சரிக்கை

சமுர்த்தி நலன்புரித் திட்டத்தால் எவரும் பயனடையவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிடுகிறார். அவ்வாறாயின் முன்னாள் சமுர்த்தி இராஜாங்க அமைச்சர் என்ற ரீதியில் அவர் தற்போது பதவி விலக வேண்டும். அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை அரசாங்கம் திருத்திக் கொள்ளாவிட்டால் ஆளும்தரப்பில் எவரும் மக்கள் மத்தியில் சென்று அரசியல் செய்ய முடியாத நிலை ஏற்படும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராராட்சி தெரிவித்தார்.

தவலதுகொட பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

அஸ்வெசும நலன்புரித் திட்டம் தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிடும் கருத்துக்கள் முறையற்றவை. அடிமட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக அவதானம் செலுத்தாமல் தன்னிச்சையான முறையில் நலன்புரித் திட்டக்கொள்கைகளைவகுக்கமுடியாது.

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை அரச அதிகாரிகள் மீது சுமத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. அரசாங்கம் எடுத்த கொள்கைதரப்படுத்தலுக்குஅமையவே அரச அதிகாரிகள் செயற்பட்டார்கள். ஆகவே, அரச அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டுக்களை முன்வைப்பதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

சமுர்த்தி நலன்புரித் திட்டத்தால் எவரும் முன்னேற்றமடையவில்லை எனநிதிஇராஜாங்கஅமைச்சர்ஷெஹான் சேமசிங்ககுறிப்பிடுகிறார். ஒருதரப்பினரது ஆலோசனைகளுக்குஅமையசமுர்த்தித் திட்டம் பலவீனமடைந்துள்ளது என்ற நிலைப்பாட்டை தோற்றுவிக்க அவர் முயற்சிக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் சமுர்த்தி இராஜாங்க அமைச்சராக ஷெஹான் சேமசிங்க பதவி வகித்தார். சமுர்த்தி திட்டத்தால் எவரும் பயன்பெறவில்லை என்றால் அவர் முறையாக செயற்படவில்லை என்று கருத வேண்டும் அவ்வாறாயின்



பொறுப்பை ஏற்று அவர் பதவி விலக வேண்டும்.

அஸ்வெசும நலன்புரித் திட்டத்துக்கான ஆட்சேபனைகள் 10 லட்சத்தைக் கடந்துள்ளன. பெரும்பாலானவர்கள் மேன்முறையீடு செய்யவில்லை. அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் உள்ள குறைபாடுகளை அரசாங்கம் திருத்திக் கொள்ளாவிட்டால் அரசாங்கத்துக்கு எதிர்காலம் கிடையாது. ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் எவரும் மக்கள் மத்தியில் சென்று அரசியல் செய்ய முடியாது. - என்றார். (05)

# கல்முனையில் குருதிக்கொடை மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்பு

வைத்தியசாலையில் ஏற்படும் குருதி வங்கியின் குருதி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக 'உதிரம் கொடுத்து உயிர்காப்போம்' எனும் தொனிப்பொருளில் இரத்ததான முகாம் ஒன்று கல்முனை முஹம்மதிய்யா ஜும்ஆ மஸ்ஜித் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை காலை 8 தொடக்கம் மாலை வரை கல்முனை முஹம் மதிய்யா ஜும்ஆ மஸ்ஜிதில், மஸ்ஜித் தலைவர் எம்.ஜே. அப்துஸ் சமட் தலைமையில் இடம்பெற்றது.

இந்த இரத்ததான முகாமை கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியாசலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஏ.எல்.எப். ரஹ்மான், மஸ்ஜித் உப தலைவர் ஏ.எம்.ஏ. அத்னான், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம். அப்துல் ரஹ்மான், செயலாளர் கே.எல். சுபையிர், வை.எம்.எம்.ஏ. பேரவை தேசிய உப தலைவர் எஸ். தஸ்தக்கீர் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து



கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

மஸ்ஜித் நிர்வாகி இசட்.ஏ. நசீர் இணைப்பு செய்த இந்த இரத்த தான நிகழ்வில் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலை இரத்தவங்கி குழுவின் தலைமை வைத் திய அதிகாரி வைத்தியர் ஏ.ஜே.எப். றிஸ்மியா, உட்பட தாதியர்கள், ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டனர். இந்த இரத்ததான நிகழ்வில் கல்முனை முஹம்மதிய்யா ஜும்ஆ மஸ்ஜித் நிர்வாகிகள், உறுப்பினர்கள், கல்முனை பிராந்திய இளைஞர்கள், பிரமுகர்கள் எனப்பலரும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர். (05)



# ஐந்து நாளாகத் தொடரும் சத்தியாகிரகப் போராட்டம்: டெங்கு தடுப்பு உதவியாளர்களுக்கு ஆதரவாக ஹரீஸ்

டெங்கு தடுப்பு உதவியாளர்களின் நிரந்தர நியமன கோரிக்கை நியாயமானது. உங்கள் பிரச்சினைகளைப் பற்றி ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சருடன் பேச்சு நடத்தத் தாம் தயாராக இருப்பதாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

அனைத்து இலங்கை டெங்கு தடுப்பு உதவியாளர் சங்கத்தின் கல்முனை பிராந்திய டெங்கு தடுப்பு உதவியாளர்கள், கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிவரும் தங்களை நிரந்தர ஊழியர்களாக்குமாறு கோரி காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்னால் போராட்டமொன்றை ஆரம்பித்த நிலையில், இன்றும் ஐந்தாவது நாளாக போராட்டம் தொடர்கிறது. இவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் அவர்களின் போராட்டத்தில் கலந்துகொண்டு டெங்கு தடுப்பு உதவியாளர்களிடம் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்காலிகமாக பந்தல் அமைத்து, சுலோகங்களை ஏந்தியவாறு சத்தியாகிரக முறையில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் பங்கேற்ற அனைத்து இலங்கை டெங்கு தடுப்பு உதவியாளர் சங்கத்தின் கல்முனை பிராந்திய தலைவர் கூறுகையில் -

கடந்த பல வருடங்களாக டெங்கு தடுப்பு உதவியாளர்களாக கடமையாற்றும் எங்களை அரசால் நிரந்தரமாக நியமிக்க முடியாமல் இருக்கிறது. எங்களுக்கான நிரந்தர நியமனம் சுகாதார அமைச்சின், சுகாதார திணைக்களத்தின் கீழ் வழங்கப்பட வேண்டும். தினம் 730 ரூபா அளவில் கிடைக்கும் சம்பளம் இப்போதைய நாட்டின் நிலைமைக்கு போதாமல் இருக்கிறது.

ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சின் பல்வேறு முக்கிய அதிகாரிகளுக்கு எங்களின் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டும், இதுவரை எங்களுக்கான தீர்வு கிட்டவில்லை. விரைவில் அரசாங்கம் எங்களுக்கான நிரந்தரத் தீர்வை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அத்தோடு, நிரந்தர நியமனம் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இவர்களின் பிரச்சினைகளை நன்றாகக் கேட்டறிந்த திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், தானும் சக நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து இந்தப் பிரச்சினையை உரியவர்களிடம்



எடுத்துரைத்து டெங்கு தடுப்பு உதவியாளர்களின் நிரந்தர நியமனத்துக்குத் தேவையான அழுத்தங்களை வழங்க உள்ளதாகத் தெரிவித்தார். (05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.07.2023இல் வெளியிடப்பெற்றது.